★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

(1959 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

[illegible] 25 சித்திரை 22 றஜப் 21 இதழ் 83

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5—5—83

மின்சாரம் பாதிக்கப்படலாம்!

[கொழும்பு]

லக்ஸபான நீர்த்தேக்கத்தில் போதியளவு நீர் இன்மையால் மின்சார உற்பத்தி பாதிக்கப் படலாமென்றும், மின்சாரத்தைப் பொதுமக்கள் சிக்கனமாகப் பாவிக்க வேண்டுமென்றும் மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

காசல்றி-மவுசாகலே நீர் ஏந்தும் பகுதிகளில் மழைபெய்யாததால் இன்னும் ஒன்பது நாட்களுக்குப் போதுமான நீர்மட்டுமே நீர்த்தேக்கத்தில் காணப்படுகின்றதாம். மழை பெய்தாலன்றி மின்சாரவெட்டு ஏற்படலாம். (இ)

பல்கலைக்கழக அனுமதி கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் [இவ்வருடம்] அனுமதி பெறுவதற்கான கால எல்லை எதிர்வரும் 9ம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி இம்மாதம் 2ம் திகதியென்று இருந்தபோதும், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சிலருக்குத் தாமதமாகக் கிடைத்துள்ளன என்று உயர் கல்வி அமைச்சுக்குக் கிடைத்தபுகார்களைக்கொண்டு இந்தக் காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளரும், மானியஆணைக்குழுவின் தலைவருமான பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்தார்.

இந்த ஆண்டு 26,833 பேர்

[8-ம் பக்கம் பார்க்க]

உரத்தின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

உரத்தின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உரத்துக்கு அரசு வழங்கும் மானியமும் மறுபரிசீலனை செய்யப்படவிருக்கிறது.

யாழ்.தபால் கந்தோரில் கொள்ளையடிக்கப்பட்ட 30,000 ரூபா மீட்கப்பட்டது!

சந்தேகத்தின்பேரில் தபால் ஊழியர் கைது

-ஏ. வி. மாணிக்கம்-

யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் நேற்று அதிகாலை கொள்ளையடிக்கப்பட்ட 30 ஆயிரம் ரூபாவும், பணம் வைக்கப்பட்டிருந்த தபாற் பைகளும் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இக் கொள்ளை நடந்துள்ளதாகப் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் சந்தேகத்தின்பேரில் ஆவரங்காலைச் சேர்ந்த தபால் ஊழியர் கே.பாலச்சந்திரனைக்கைது செய்து விசாரணையை மேற்கொண்டனர். விசாரணையின் போது கிடைத்த தகவலைத் தொடர்ந்து தபால் கந்தோர் தண்ணீர்ப் பீலி அடிப்பாகத்தில் பணம்பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

விசேட குற்றத் தடுப்புப்பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் என். கதிர்காமநாதன், சார்ஜன் ஜி. மாகினாமணி, கான்ஸ்டபிள்கள் ஜி தர்மகுலசிங்கம், து கனகலிங்கம் ஆகியோர் இச் சம்பவம் தொடர்பான விசாரணையை நடத்திப் பணத்தை மீட்டுள்ளனர்

பணம் வைக்கப்பட்டிருந்த இரு தபால் பைகளும், தபால் கந்தோரிலுள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது.

விசாரணையின்போது தபால் அறையில் 8 பேர் கடமையாற்றிக் கொண்டிருந்ததாகவும், அப்போது அடிக்கடி மின் தடையேற்பட்டதாகவும்தெரியவந்துள்ளது.

மின் தடைபட்ட நேரத்திலேயே பணம்பை கொள்ளையடிக்கப்பட்டதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

பொலிசாரினால் மீட்கப்பட்டுள்ள 30,000 பணமும் இன்று காலை யாழ். நீதிமன்றத்தில் பாரம் கொடுக்கப்படுவதுடன் சந்தேகநபரும் ஆஜர் செய்யப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (மா-க)

ஐ. தே. க. வேட்பாளர் கொலை:

பரு. இளைஞர் ஒருவர் கைது!

[புலோலி]

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் இரட்ணசிங்கத்தின் மரணம் தொடர்பாக பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை கிராமோதய சபை உறுப்பினரான இவ்விளைஞர் சிறந்த விளையாட்டு வீரருமாவார்.

செ. விஜயராஜா என்ற இவ்விளைஞர் செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டார்.

டேவிட் ஆட்கொணர்வு மனு: ஆட்சேபம் தாக்கல்செய்ய ஜூன் 17 வரை அவகாசம்!

(கொழும்பு)

காந்திய இயக்கத் தலைவர் டேவிட் ஆட்கொணர்வு மனு அப்பீல் நீதிமன்றத்தில் நீதிபதிகள் எச். டபிள்யூ தம்பையா, பி. எல். ரி. மூனமலே முன்னிலையில் எடுக்கப்பட்டது

எதிர்மனுதார் சார்பில் ஆட்

(8-ம் பக்கம் பார்க்க)

மாதம்பையில் கார் விபத்து

வல்வை தொழிலதிபரும் 2 பிள்ளைகளும் பலி!

(கொழும்பு)

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் தேவசிகாமணியும், அவரது புதல்வி சுகுணாவும், புதல்வன் அசோக்குமாரும் மாதம்பையில் நடந்த கார் விபத்தில் பலியானார்கள்.

வல்வெட்டித்துறையிலிருந்து இவர்கள் கார் ஒன்றில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும், இரவு 10மணியளவில் மாதம்பையில் கார் மரத்துடன் மோதி இந்த விபத்து நடந்ததாகவும் கூறப்படுகிறது. (அ)

தாதிகள் விடுதிக்குள் நுழைந்த ஆசாமி கைது!

(கிளிநொச்சி)

ஆஸ்பத்திரித் தாதிகள் விடுதியில் இரவுவேளையில் அத்துமீறி உட்பிரவேசித்த இளைஞர் ஒருவரைப் பொலிசார் கைது செய்தனர்.

இச்சம்பவம் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளது. இரவு வேளை தாதிகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது தாதிகள் விடுதியின் மதிற்சுவரால் உட்புகுந்த திருநகரைச் சேர்ந்த பசுபதி கோபால் [வயது 20] என்னும் இளைஞர் விடுதிக் கதவைத் தட்டி உறக்கத்திலிருந்த தாதிகளை எழுப்பி விடுதிக்குள் சென்று தானும் தாதிகளுடன் தங்கப்போவதாகக் கூறியதுடன், அங்குள்ள கட்டிலில் படுத்திருந்தாராம். பயமும் பீதியும்கொண்ட தாதிகள் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொண்டதையடுத்து பொலிசாரின் உதவியை வைத்திய அதிகாரி நாடினார். ஸ்தலத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸ் சார்ஜன்ட் எம் ஞானரத்தினம் பிரஸ்தாப வாலிபரைக் கைது செய்து விசாரணைசெய்துவருகிறார்.

வடபகுதி தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க

ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக்கத் திட்டம்!

1985ல் ஆரம்பித்து 3 ஆண்டுகளில் பூர்த்தியாக்கப்படும்

— இ. கந்தசாமி —

[கொழும்பு]

வடக்கில் நிலவும் நன்னீர்த் தட்டுப்பாட்டை நீக்கவும் பெருமளவிலான விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கவும் வழிவகுக்கும் விதத்தில் ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக மாற்றுவதற்கான திட்டம் 1985-ம் ஆண்டு ஆரம்பிக்கப்படவிருக்கிறது

இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதன் அவசியம்பற்றி நேற்று அமைச்சரவை உப குழுவைச் சந்தித்துப் பேசிய உயர்மட்ட பிரமுகர்கள் குழுவொன்று வற்புறுத்தியது

ஓய்வுபெற்றநீர்ப்பாசனப் பிரதப்பணிப்பாளர்களின் ஆறுமுகம், கே சண்முகராஜா, பேராசிரியர் எச். டபிள்யு தம்பையா, யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைதலைவர் திரு. அ.நடராசா, அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவராசன், காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. நந்தா அபேவிக்கிரமா, நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் திரு. ஏ ஜே. பி பொன்ராஜா ஆகியோர் அமைச்சரவை உப குழுவைச் சந்தித்து ஆலோசனைகளை நடத்தினர். இத்திட்டத்தின் அவசியத்தை வற்புறுத்தும் மகஜர் ஒன்றும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஆனையிறவு ஏரியை நன்னீர் ஏரியாக்கும் திட்டத்தை நிறைவேற்ற 2 கோடியே 10 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்றும் 1980 ம் ஆண்டு மதிப்பிடப்பட்டதாகவும் இதுநிறைவேற்றப்படும்போது யாழ்.

(8-ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க.

வேட்பாளர் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர்களில் ஒருவர், தாம் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

9வது வேட்பாளரான திரு. சின்னத்தம்பி விஜயநாதன் என்பவரே விலகிக்கொள்வதாகத் தெரிவித்தவராவார் (மா)

வரி விளம்பரம்

தேவை

ஆண் பெண் தொழிலாளர்கள் தேவை. 10-ம் தேதிக்கு முன் (10-5-83) நேரில் வரவும். (காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை) யாழ்ப்பாண முனிசிபல் எல்லைக்குள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. விஜயம் இன்டஸ்றியல் வேக்ஸ். யாழ்ப்பாணம். [7091]

லேத் வேலை, வெல்டிங் வேலையில் தேர்ச்சி பெற்றவர்கள். இரும்பு கேற், கதிரை, அலுமாரி ஆகியன செய்முறை அனுபவம் பெற்றவர்களும் தேவை உடன் தொடர்பு கொள்ளவும். பரஸ்சோ என்ஜினியறிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பணம். [7092]

யாழ். நகரில் பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்கு கீழ்காணும் ஊழியர்கள் தேவை. Store Keeper (Ladies) Sales Clerk (Gents) Driver. தகைமைச் சான்றிதழ்களுடன் 10-5-83க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 7096. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (7096)

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் வியாபார ஸ்தாபனத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்ற ஒருவர் தேவை. சம்பளம் மாதம் ரூ. 1200/-உம் மாத வசூலில் ஒரு வீதம் கொமிஷனும் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். முடிவு திகதி; 8-5-83. விளம்பர இல. 7106, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [7106]

கூடிய அனுபவம் உள்ள வெட்டரும் உதவியாளரும் தேவை. ஸ்ரீ துர்கா வெல்டேஸ். 185/1, இன்னர் லேன், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். [7111]

சிலிண்டர் மெஷின் வைண்டர் தேவை. நேரில் வரவும். 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [7107]

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் கமிஷனுக்கு விடப்படும். ரவர் கோப்பி அன் கூல்பார், 324, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். [7113]

பயிற்சி

யாழ். நகரில் பிரபல நிறுவனத்தில் குழாய் பொருத்துனர் (Plumbers) பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிக்காலம் ஒரு மாதம், அனைவரும் விண்ணப்பிக்கலாம். 10-5-83க்கு முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7108, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [7108]

விற்பனைக்கு

தமிழ், ஆங்கில புதிய, பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; நிர்வாகி - சங்கர் கல்வி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை, 7011

கொக்குவிலில் 4 பரப்பில் வீடு தனிக்கிணறு மின்சாரம் சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. S, மாதவகுமார், றெயில்றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். [7112]

கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி இடவளவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 17-05-1983 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்கள் இப் பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும். கேள்வி வைப்புப் பணமாக 100/- ரூபாவும், மீளளிக்கப்படாத கட்டணமாக 25/- ரூபாவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

யாழ்ப்பாணம்,
03-05-1983. [7110]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திருநெல்வேலி.

முதுகலைமாணித் தகுதித் தேர்வு

மேற்குறிக்கப்பட்ட தேர்வுக்கு 1983-ம் ஆண்டு மே மாதம் 30-ந் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்களை 23 × 10 செ. மீ. அளவினதான சுய முகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை உதவிப் பதிவாளர், தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பி அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
02-05-1983. [7115]

விற்பனையாளர்கள் தேவை

வீடு கட்டுவதற்கான பொருட்கள்,
இரும்புச்சாமான்கள் விற்பனையில்
அனுபவமும், திறமையுமுள்ளவர்கள் தேவை

விண்ணப்பிக்கவும்.

த. பெ. எண் 52, யாழ்ப்பாணம்.

[7114]

யாழ். செயலகத்தில்

பிறப்புப் பத்திரம் பிரதிபண்ணும் யந்திரம் செயல்படத் தொடங்கியது!

(யாழ்ப்பாணம்)

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதில் இதுவரை காலமும் இருந்து வந்த தாமதத்துக்கு யாழ்ப்பாண செயலகத்தில் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலதிக மாவட்ட பதிவாளர் திரு செ. அன்னலிங்கமும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன் பிரதிபண்ணும் இயந்திரம் வாங்குவதற்கென பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 75,000 ரூபா ஒதுக்கியிருந்தார். இந்த நிதியில் இருந்து புதிய இயந்திரம் ஒன்று 72,200 ரூபாவுக்கு இப்பொழுது வாங்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் வாங்குவதற்கு முன்னர், கடந்த மாதம் 25ம் திகதிவரை யாழ்ப்பாணம் செயலகத்திலுள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் சுமார் ஆறாயிரம் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பெறும் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடந்தன. (மா)

நல்லை ஆதீனத்தில் அப்பர் குருபூசை

[யாழ்ப்பாணம்]

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் 7-ம் திகதி சனிக்கிழமை திருநாவுக்கரசர் குருபூசை விழா நிகழும்.

அன்றுமாலை 'அப்பர் கண்ட கயிலைக்காட்சி' என்ற விடயம் பற்றி அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் விரிவுரையாற்றுவார். சங்கீதபூஷணம் திரு. பாலசிங்கத்தின் பண்ணிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ப

நடப்பு வருட நிர்வாகிகள்

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டை பிளவத்தை சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டமும் சித்திராபௌர்ணமி விழாவும் தலைவர் கி. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கி. தாமோதரம்பிள்ளை, உபதலைவர்: பு. விக்கினேஸ்வரன், செயலாளர்: ந. ஐயம்பிள்ளை. உபசெயலாளர்: த. சிவானந்தன். பொருளாளர்: த. சந்திரகுமார், உபபொருளாளர்: கி. புவனேந்திரன். ஏழு பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். திறந்தவெளி அரங்கில்

'ஞானசவுந்தரி' நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி மகளிர் நாடக மன்றத்தினரின் 'ஞானசவுந்தரி' நாட்டுக்கூத்து (தென்மோடி) இம்மாதம் 7ம் திகதி இரவு யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறவுள்ளது.

ஆனையூர் புதிய அடைக்கல நாயகி ஆலய நிதிக்காக இந்த நாடகம் நடாத்தப்படுகிறது.

யாழ். ஆயர் பேரருட் திரு வ. தியோகுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (மா)

'பூரண மற்ற கிராமோதயசபை''

(மானிப்பாய்)

கிராமோதய சபைகள் தற்பொழுது பூரணமான அமைப்பைப் பெறவில்லை, இதனால் நமது பகுதிகளில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றை பூரணமாக அமைக்கின்ற போது நம்மவர்களிடையே ஏற்படுகின்ற போட்டி பூசல்களைத் தவிர்க்க முடியும்.

இவ்வாறு ஊரங்குணை கட்டுவன் கிராமோதய சபைத் தலைவர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தியை பாராட்டு முகமாக நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஏழாலை அ. மி. த. பாடசாலை அதிபர் திரு. ச. கந்தசாமி தெரிவித்தார். திரு. வ வல்லிபுரம் தலைமையிலேகூட்டம் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்றைய பலன்

சித்திரை மாதம் 22-ம் திகதி
வியாழக்கிழமை
(5-5-83)

மேடம்: திடீர் திருப்பம் நல்ல முடிவைத் தேடித்தரும் ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றியவை இலகுவில் முடிவடையும் இயந்திரங்களுடன் வாகனங்களுடனும் பழகுபவர்கள் புகழடைவர்.

இடபம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும் குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும் மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் உண்டு

கடகம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்கு கிடைக்கும் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும் சாஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

சிங்கம்: வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ளநேரிடலாம் அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும் சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக் கூடும் சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

கன்னி: ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர் விருந்தினர்கள் வருகையால் வீடே கலகலப்பாக இருக்கும்.

துலாம்: செய் தொழிலால் சிறப்படைவதற்கு இடமுண்டு புதிய கண்டுபிடிப்புகளும் இடம் பெறும் பொறியியலாளர்களுக்கு பொன்னான தினம் சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கலாம்.

விருச்சிகம்: மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராள குணத்தின் மூலம் தனமும் சேரும் புண்ணிய யாத்திரையுண்டு உண்மைவழி நின்று உயர்வடைவீர்கள்.

தனு: இன்று எதிலும் நிச்சயமற்றநிலைமை தென்படும் மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும் உணர்ச்சி வசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும் அடக்கம் நன்று.

மகரம்: முன்னேற்றம் தடைபடும் குறுக்கு வழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம் ஏதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று.

கும்பம்: மேடைப் பேச்சாளர்களுக்கும் நடிகர்களுக்கும் பெரும்புகழ் குவியும் பொருள் வரவுக்கும் இடமுண்டு இல்லத்தில் திருப்திகரமான நிலை உருவாகும்.

மீனம்: அன்னிய சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும் தொழிலில் தடை உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


சென்னை-ரூபவாகினி
நிகழ்ச்சிகளைத் தெளிவாக கண்டு களிக்க
தொலைக்காட்சி ஏரியல் அமைப்பதற்கு...

வீனஸ் நியூவீனஸ்

ரீ.வீ., றேடியோ உத்தரவாதத்துடன்
மணிக்கூடுகளை பழுதுபார்த்துக் கொள்ளவும்

புதிய ரீ.வீ, றேடியோ, மணிக்கூடுகளை
வாங்கிக்கொள்ளவும்

விரும்பிய பாடல்களை
பதிவு செய்துகொள்ளவும்

திருமணங்களைவைபவங்களை
வீடியோவில் படம்பிடித்துக்
கொள்ளவும்

மேலும் யாழ். நகரில் உத்தரவாதத்துடன்
ரீ.வீ ஏரியல் பொருத்திக்கொள்ள

வீனஸ்
266/1, ஸ்ரான்லி வீதி
ஸ்ரீதர் தியேட்டர் அருகில்
யாழ்ப்பாணம்

நியூ வீனஸ்
79/1
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

பொலிஸ் பாதுகாப்பிலுள்ளவர்களின்

பிடிஆணைகளை ரத்துச்செய்ய

சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, மே. 4

பொலிஸ் பாதுகாப்பிலுள்ள சகலரது பிடி ஆணைகளையும் ரத்துச் செய்யும்படி சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாட்டிலுள்ள சகல மாஜிஸ்திரேட் நீதிபதிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

தீர விசாரணை செய்யாது பொலிசாரின் சமர்ப்பணங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு நீண்ட காலங்களுக்கு கைதிகளை சிறையில் வைத்திருக்க மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் உத்தரவிடுவதையடுத்தே மேற்கண்ட உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம்பிறப்பித்தது.

பணப்பிணை, ஆள்பிணை வழங்குவதிலும் தாமதங்கள், கெடுபிடிகள் நிலவுவதால் சந்தேக நபர்கள் பலர் வீணே பல நாட்களுக்கு தடுப்புக் காவலில் இருக்க வேண்டிய நிலை இருப்பதையும் சென்னை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன் சிறையில் தடுப்புக்காவலில் வைக்கப்படுவோர் மரணமடைவதையும் சென்னை உயர்நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளது.

இவற்றைத் தொடர்ந்தே மேற்கண்ட உத்தரவை சகல மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது.

பொலிசார் சந்தேகநபர் ஒருவர் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளுக்கு மட்டும்செவிமடுப்பது சந்தேகநபரைப் பெருமளவு பாதிக்குமென்றும் இதனைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு தடுப்புக்காவலில் வைக்கும்படி பணிப்பது சட்டத்துக்கு புறம்பானதென்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

சகல மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களுக்கும் பிறப்பித்துள்ள தனது உத்தரவை பூரணமாக அமுல் படுத்துமாறு தமிழ்நாடு அரசையும், பொலிஸ் டைரக்டர் ஜெனரலையும் சென்னை உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டது. (கி)

லொறி கிணற்றில்! 2 பேர் பலி

சென்னை மே 4

சேலத்தில் லொறி ஒன்று கிணற்றில் வீழ்ந்ததினால் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார். பம்பாயில் இருந்து மதுரை நோக்கி இந்த லொறி வந்து கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது. (சு)

பருவமழைவரை நீர்விநியோகம்

சென்னை, மே 4

அடுத்த பருவமழை அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஆரம்பமாகும் வரை சென்னைப் பெருநகருக்கு போதியளவு நீர்வழங்கமுடியுமென்று சென்னை பெருநகர் தண்ணீர் வாரியம் தெரிவித்துள்ளது. இத்தண்ணீர் வழங்கல் ஒருநாள் விட்டு ஒருநாள் இடம்பெறுமென்றும் அறிவிக்கப்பட்டது

தற்போது சென்னை பெருநகருக்கு நாளொன்றுக்கு நாலரைக்கோடி கலன் நீர்விநியோகிக்கப்படுகிறது. எதிர்காலத்தில் இந் நீர்விநியோகம் ஒரு சில மாற்றங்களுடன் நாளொன்றுக்கு 4 கோடி கலனாக ஒருநாள் விட்டு ஒருநாள் விநியோகிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழகத்தின் சில இடங்களில் சிறிதளவு மழை பொழிவு காணப்பட்டது. வேறும் சில இடங்களிலும் மழை பெய்யும் அறிகுறிகள் காணப்படுகின்றன. (கி)

சீனாவில் ஒருமனிதச்சுவர்

பீக்கிங் மே 5

சீன கடுகதி புகையிரதமொன்றின் சிப்பந்திகளால் மனிதச்சுவர் ஒன்று கடந்த புதன்கிழமை அமைக்கப்பட்டது!

'பீக்கிங் - உரும்சி' என்ற அந்த கடுகதி புகையிரதம் கோபிபாலைவனத்தில் கடும் மணற்புயல் காரணமாக நிறுத்தப்பட்டது. சுமார் ஆறுமணித்தியாலங்கள் வரை அது அங்கு நின்றது. இதனால் அதன் சுமார் 60 யன்னல் கண்ணாடிகள் மணல் புயலினால் நொருங்கலாயின.

இதனைத் தொடர்ந்து அந்த கடுகதியில் அன்று பயணஞ் செய்துகொண்டிருந்த ரயில்வே உயர் அதிகாரியொருவர் அப்புகையிரதத்தின் சிப்பந்திகளையும் அதிலிருந்த இராணுவ வீரர்கள் சிலரையும் அழைத்து நொருங்கிய ஜன்னல்களுக்கு முன்னால் நீளமாக அவர்களை நிறுத்தி ஒரு மனிதச் சுவரை அமைத்தார்!

இதனையடுத்து மணற்காற்றினால் பாதிக்கப்படுவதிலிருந்தும் பயணிகள் பாதுகாக்கப்பட்டனர். (கி)

மேற்கிந்தியா - இந்தியா 5-வது டெஸ்ட் சரிசமம்!

லண்டன் மே 5

இந்தியாவுக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையே அண்டிகுவா செயின்ட்ஜோன்ஸில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்ட் கிரிக்கெட் பந்தயம் சரிசமனாக முடிவடைந்தது.

இந்த இறுதி பந்தயம் முடிவடைந்ததையடுத்து இந்தியாவுக்கும், மேற்கிந்தியாவுக்குமிடையே நடந்த இரண்டரை மாதங்களாக இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் 2-0 என்ற ரீதியில் மேற்கிந்தியா வெற்றி பெற்றது.

ஐந்து டெஸ்ட்களில் மேற்கிந்தியா இரண்டில் வெற்றி பெற்றிருந்தது. மூன்று சரிசமனாக முடிவடைந்தது.

நேற்றைய இறுதி டெஸ்டின் 2வது இன்னிங்ஸில் மொஹிந்தர் அமரநாத் 116 ஓட்டங்களை பெற்று சிறப்பாக ஆடினார். கைக்வாட் 72 ஓட்டங்களைப் பெற்றார். இந்தியா 247 ஓட்டங்களை 5 விக்கட்டுகள் நட்டத்துக்குப் பெற்றது. இதனையடுத்து இப்பந்தயம் ஆட்ட இறுதியில் சரிசமனாக முடிவடைந்தது. (கி)

பணியாளர் நலன்புரிச்சங்கம்

(வண்ணார்பண்ணை)

பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் இச்சபையின் பணியாளர் நலன்புரிச்சங்கம்'' ஒன்று 29ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இச்சபையின் உள்ள கணக்காய்வாளர் திரு. இ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற பணியாளர் கூட்டத்தில் இச்சங்கம் அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது.

இந்த நலன்புரிச் சங்கத்தின் தலைவராக திரு. இ. மாசிலாமணியும், உபதலைவராக திரு. எஸ். கோகுலதாசனும், செயலாளராக திரு. ரி. இராசரத்தினமும், பொருளாளராக திரு. வி. ஜி. தங்கவேலுவும் தெரிவு செய்யப்பட்டனர் செயற்குழுவும் தெரியப்பட்டது

மூன்றுகுருமார்மீது கொலைக் குற்றம்!

லண்டன், மே. 4

பிலிப்பைன்ஸில் மூன்று றோமன் கத்தோலிக்க குருமாருக்கு எதிராக கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மாணவர் சபைத் தலைவர் ஒருவரை கடந்த ஆண்டு கொலை செய்ததாக அவுஸ்திரேலியப்பிரஜை, அயர்லாந்துப் பிரஜை உட்பட இந்த மூவர் மீதும் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதே போன்ற குற்றச்சாட்டுக்கள் வேறு 12 திருச்சபை ஊழியர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு 'பிடி ஆணை' பிறப்பிக்கப்பட்டுள்ளது. (சு)

அந்த்ரபோவின் புதிய அணு ஆயுதகுறைப்புயோசனை!

மாஸ்கோ, மே. 4

அணு ஆயுதங்கள், ஏவுகணைகள் என்பனவற்றின் உற்பத்திக் குறைப்புப் பற்றிய சோவியத்தின் யோசனைகளை, சோவியத் அதிபர்திரு. யூரி அந்திரபோவ் மேலும் விஸ்தரித்துள்ளார்.

அவர் தமது புதிய யோசனைகளில் நேட்டோ நாடுகள் குறைத்துக் கொள்ள விரும்புகிற அளவுக்கே சோவியத் யூனியனும் தனது அணுகுண்டுகளையும், ஏவுகணைகளையும் குறைக்கும் என்று தெரிவித்தார்.

பிரிட்டிஷ், பிரான்ஸ் அணுகுண்டுகள் மற்றும் ஏவுகணைகளின் உற்பத்திப் பெருக்கம் குறித்தே தமது இக்கருத்துக்களை வெளியிட்ட அவர், இந்த நாடுகள் மேற்குறிப்பிட்ட ஆயுதங்களில் மேற்கொள்ளும் உற்பத்திக்குறைப்பின் அடிப்படையிலேயே சோவியத்தும் தனது உற்பத்தியைக்குறைக்குமென்றார். அமெரிக்காவைப் பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

திரு. யூரி அந்திரபோவின் யோசனையை மேற்கத்திய நாடுகள் பல வரவேற்றுள்ளன. 'இந்த யோசனை 'நேட்டோ' நாடுகளும், வார்சோ நாடுகளும் அணு ஆயுதபரிகரணத்தில் சமநிலையைப் பராமரிக்க இடமளிக்கிறது' என்று அவை தெரிவித்துள்ளன.

அமெரிக்க இந்தயோசனையை வரவேற்று கருத்துவெளியிடுகையில், அணுகுண்டுகள் ஆயுதங்கள் என்பவற்றைக்குறைப்பதான சோவியத்துடனான பேச்சுக்களிலுள்ள முன்னேற்றத்தை அந்திரபோவின் இவ்யோசனை காட்டுகிறது என்று தெரிவித்தது. (கி)

போலந்தில் புதிய வன்முறைகள்

வார்சோ மே 5

போலந்து நகரான வார்சோவில் நேற்று புதிதாக வன்முறைகள் ஆரம்பித்தன. சுமார் எண்ணாயிரம் பேர் வார்சோவிலுள்ள கத்தோலிக்க ஆலயமொன்றில் ஆராதனை செய்தபின்னர் சாதாரண ஊர்வலமொன்றை ஆரம்பித்தனர்.

இந்த ஊர்வலம் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்ததையடுத்தே வன்முறைகள் தலைதூக்கின. ஊர்வலக்காரரை இடைமறித்தபொலிஸார் அவர்களைக் கலையும்படி உத்தரவிட்டனர். ஆனால் ஊர்வலக்காரர் இவ்வுத்தரவை ஏற்கமறுத்தனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களையும் கண்ணீர்ப் பிரயோகம் தடியடி ஆகியனவற்றை மேற்கொண்டனர்.

இந்த ஊர்வலம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து வார்சோவில் ஆங்காங்கு வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. போலந்தில் தலைமறைவாக இயங்கிவரும் தடைசெய்யப்பட்ட சொலிடாறிற்றி இயக்கப்பிரிவினரே இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

"குறைகளையும், பிரச்னைகளையும் தீர்ப்பது எப்படி?''

மாவட்டசபை அரசஅதிகாரி விளக்கம்

(மாவிட்டபுரம்)

''மக்கள் தமது குறைகளை வீதிகளில் நின்றும், பொது இடங்களில் நின்றும் கூறுவதினால் பிரச்னைகள் தீராது. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக வளர்க்கும் நிலைக்கு இடமளிக்கக் கூடாது. தமது குறைகள், பிரச்னைகள் யாவற்றையும் நேரடியாக எம்மிடம் தெரியப்படுத்தினால் அவற்றை தீர்க்க முடிந்த அளவில் செயல்படுவோம்.''

இவ்வாறு மயிலிட்டி கண்ணகி படிப்பகத்தின் 16 வது ஆண்டு நிறைவு விழாவிலும், 5வது ஆண்டு விளையாட்டு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய மாவட்ட அபிவிருத்திச் சபையின் காங்கேசன்துறை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் கூறினார்.

படிப்பக தலைவர் திரு. எஸ் வடிவேலீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மக்களது குறைகளை பிரச்சனைகளை அறிந்து அவற்றை சுலபமாகவும், கூடியவிரைவிலும் தீர்த்து வைக்கும் நோக்குடனேயே நாம் செயல்பட்டு வருகிறோம். பிரச்னைகளை நேர்முகமாக தெரிவிப்பதன் மூலம் அவற்றை சுலபமாகத் தீர்க்க முடியும். இப்பகுதி மக்களது பிரச்னைகள் குறித்து அபிவிருத்திச் சபையுடனும் தொடர்பு கொண்டு கூடிய விரைவில் தீர்த்து வைப்பதே எனது குறிக்கோள்.

விளையாட்டுப் போட்டிகள் கிராமங்கள் தோறும் நடைபெறுவது கிராம இளைஞர்களதும், சிறுவர்களதும் உடல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். இதுபோன்ற உள வளர்ச்சியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அறிவு பூர்வமான நிகழ்ச்சிகளையும் கிராம ரீதியாக நடத்த வேண்டும்'' என்றார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. அவற்றை திரு. க. சண்முகநாதன் வழங்கினார்.

சுண்டிக்குளம்'கொந்தளிப்பு' தணிந்தது

[கிளிநொச்சி]

சுண்டிக்குளம் கடலில் ஏற்பட்ட மீனவர் தகராறு சமரசமாகத்தீர்த்துவைக்கப்பட்டது.

கடந்த வாரம் தட்டுவன்கொட்டி மீனவருக்கும், கண்டாவளை புளியம்பொக்கணை மீனவர்களுக்குமிடையே சுண்டிக்குளம் கடலில் ஏற்பட்ட தகராறுகைகலப்பாகமாறிஇருபகுதி மீனவர்களில் பலர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

இருபகுதி மீனவர்கள் மத்தியிலும் பெரும் பதட்டநிலை உருவானதைத் தொடர்ந்து கிளிநொச்சி எம். பி. ஆனந்த சங்கரியின் வேண்டுதலின் பேரில் யாழ் மாவட்ட சபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா கிராமசேவை அலுவலர் திரு. க. தனபாலசிங்கம், பரந்தன் பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கார்த்திகேசு ஆகியோர் இருபகுதி மீனவரையும் அழைத்துச் சமரச முயற்சி ஒன்றை மேற்கொண்டனர்.

பழைய பகைகளைமறந்து அவரவருக்கு ஒதுக்கப்பட்ட கடல் பகுதிகளில் மீன்பிடிக்குமாறு சமரசக்குழுவின் தலைவ

(6ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

காதல் உள் விடுவது, ஆண்களுக்கு கண்கள்மூலம்; பெண்களுக்கு காதுக்கூடாக; காதலுக்குக் கண் இல்லை என்பது தவறு; ஆனால் அக்கண்கள் என்றும் குழந்தைகளே!

—பிரெஞ்சுப்பழமொழி

நமது நோக்கு

பல்கலைக்கழக அனுமதி

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது நியாயமானது.

முந்திய நாளுடன் முடிவடைந்த இக்கால எல்லைக்குள் ஏறத்தாழ அரைவாசி மாணவர்களே விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பரீட்சை முடிவுகள் பிந்திக் கிடைத்த மாணவர்களுக்கு கால எல்லை நீடிப்பு மிக அவசியமானது.

விண்ணப்பிக்காத, ஆனால் வேண்டிய தகைமையுடைய ஆயிரக்கணக்கான மாணவர் இது பற்றிக் காலந்தாழ்த்துவதோ அல்லது விண்ணப்பிக்க விரும்பாததோ பல்கலைக்கழகக் கல்வியில் ஒரு புதிய திருப்பமெனலாம்; நடப்பதெல்லாம் நன்மைக்கே!

என்ன தவஞ்செய்தும் பல்கலைக்கழகத்துக்குள் நுழையோட்டிவிட வேண்டுமென்ற பித்தின் வீறு குறைந்துவருகிறது: நல்ல சகுனம். சமூகத்துக்கும் தனிப்பட்டவர்களுக்கும்.

பெண்களுக்கு ஒருபட்டம் கல்யாண மார்க்கெட்டில் இன்றும் கிராக்கியளிக்கிறது; ஆனால் வெறும் கலைப்பட்டம் தொழில்புரிய வல்ல பெண்களை நாடும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு அதிக பலனளிக்காது.

விஞ்ஞானப்பட்டமானாலும், கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம் போன்ற தொழில்களைக் குறிக்கும் பரீட்சைக்கொப்பாகாது; இது இன்றைய போக்கு.

ஆண்கள் பெரும்பாலும் உடனடி உத்தியோகம் தரும் மருத்துவம், பொறியியல், கணக்கியல்போன்ற நேரடிப் பயிற்சியளிக்கும் உயர்கல்வியையே நாடுகின்றனர். நல்ல வெளிநாட்டு வேதனமும் உள்நாட்டுச் சீதனமும் இருபெரும் தூண்டுதல்கள்.

பெற்றோர்களின், மாணவர்களின் நோக்கு இவ்வாறானால், திட்ட அமுலாக்கல் அமைச்சு இந்தப்படிப்புத் திட்டங்களுக்கமையத் தொழில்வளம் பற்றிச்சிந்திக்கிறதாகச்செய்தி குறிப்பிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியை எல்லையாக வைத்து, அதற்குத்தேவையான டாக்டர்கள் பொறியியலாளர் தொழில்நுட்பவியலாளர்கள் போன்றோரின் புள்ளிவிபரங்களை இந்த அமைச்சு தயாரித்திருக்கிறது.

'மனிதவளத்தேவை' அறிக்கை அடிப்படையிலேயே பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் மாணவர் சேர்த்துக்கொள்வது பற்றி அமைச்சுஆராய்வதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கை போன்ற வளர்ச்சியடையும் நாடுகளின் பல்கலைக்கழகக் கல்விக்கும் நாட்டின் தேவைகளை விரைவில் பூர்த்தி செய்யவல்ல பயிற்சிபெற்ற மனிதவளத்துக்குந்தொடர்பான திட்டம் - ஒருநிபுணர் திட்டம் மிக அவசியம்; ஆனால் அதற்கு மேற்பட்ட தரம் குறைந்த பட்டதாரிகளுக்கும் பல்கலைக்கழகத்தில் இடமளிக்க வேண்டும்.

கண்டபடியெல்லாம் பட்டதாரிகளை உற்பத்தி செய்துவிட்டு அவர்களுக்குத் தக்க தொழில் வாய்ப்பில்லாத ஏமாற்ற நிலையில், சாப்பாட்டுக் கிளப் ஒன்றை அமைத்து அதில் வழங்கப்படும் சுவை (நிறைந்த) குறைந்த தோசைக்கு, 'B. A.' அல்லது 'M. A. பட்டம்' சூட்டிவிடும் பரிகாசநிலை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்; தகுதியுள்ள மாணவர்கள் கலைப் பிரிவுக்கும் மிக அவசியமென்பதை இது மறுக்கவில்லை.

அதற்கு நேர் மாறாக 'மனித வளத் திட்டத்துக்கு அவசியமற்ற திறமைசாலிகள் எல்லோருக்கும் பல்கலைக் கழகம் பூட்டப்பட்டிருப்பதும் வரவேற்கத்தகாத கண்டிப்பான நிலை; எந்த நிலையிலும் பல்கலைக்கழக உயர்கல்வி தகுதியுடையோருக்கு கல்வி அளிக்கப்படவேண்டிய பொறுப்பு அலட்சியத்துக்குரிய விடயமல்ல.

மனிதவளத் திட்டம் எவ்வாறு அமுலாக்கப்படுகிறது? இது இன்னொரு முக்கிய கேள்வி. நாட்டுக்குத்தேவையான உயர் கல்விக்குரிய டாக்டர்கள். பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியல் போன்ற பயிற்சி நெறியில் உருவாகும் பட்டதாரி நிபுணர்கள் என்ன அடிப்படையில் அனுமதி பெறுகிறார்கள்?

இதுவே இன்று இந்நாட்டில் என்றுமே காணாத நெருக்கடியை உருவாக்கி வந்திருக்கிறது; நாட்டின் வரலாறு செவ்வனே எழுதப்பெற்றால் இதன் அநீதி அம்பலமாகும்.

திறமைக்கே முதலிடமானால் நோயாளிகள் திறமையற்ற மருத்துவ பட்டதாரியின் தயையிலும், பாலங்கள் கட்டிடங்கள் போன்ற ஆக்க வேலைகள் திறமையற்ற பொறியியலாளர் பொறுப்பிலும் தங்கியிருக்கும் அபாயம் தவிர்க்கப்படும்; நிபுணத்துவத்துக்கு மாற்றுப் பாதை கிடையாது.

நீண்ட காலம் அமுலிலிருந்த இந்த நியாயமான நேர்மையான பாதையை விட்டு விலகின காலம் தொட்டு பல்கலைக் கழகப் படிப்பின்மதிப்பும் அது உருவாக்கிய பட்டதாரிகளின் பங்களிப்பும் ஒரு ஆழமான பாரபட்சமற்ற ஆய்வுக்குரிய விடயம்; பொய் தவிர்த்த புள்ளி விபரங்கள் தாமே பேசும்,

இந்த அனுமதி முறை பெரும்பான்மையான சிங்கள மாணவர்களுக்குச் சார்பாக மாற்றியமைத்த காலந்தொட்டு—ஏன் ஒரு தெளிவான ஸ்திரமான கொள்கையற்ற நிலையில் - பல திறமைசாலிகள் பல்கலைக்கழக அனுமதி என்ற 'எலி ஓட்டத்தில்' நம்பிக்கை இழந்துவிட்டனர்; நல்ல காலம் கணக்கியல் போன்ற உயர்தர படிப்பும் பயிற்சியும் இவர்களுக்கு வெளியே கிடைக்கின்றது.

பல விவேகமான, அனுமதிக்குரிய பெரும் புள்ளிகள் பெற்ற மாணவர்களே தோல்வியடைவதனால் நடுத்தர மாணவர்கள் மனங்குலைந்து விரக்தி மனப்போக்கில் உயர்கல்வியையே உதறித் தள்ளுகின்றனர். விண்ணப்பிக்க உந்தும் [illegible] வீறு மடிந்து விட்டது.

இதற்கு மேலாக, அனுமதி பெறும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் நிலவும் பல குறைபாடுகள் எதிர் நோக்குகின்றன; அவற்றை முறியடிக்கப் போராடும் முயற்சியிலே படிக்கும் ஆர்வம் மழுங்கி விடுகிறது.

எவ்வகையில் பார்த்தாலும் ஒவ்வொரு துறையிலும் இலங்கை பெருமைப் படக்கூடிய நிபுணர்கள் பல்கலைக்கழக வாயிலாக உருவாகிவந்த மரபு மங்கிவிட்டது.

தகுதியைத் தாரக மந்திரமாக வைத்து இந்த சீரழிந்த நிலையை ஒரு நடுநெறி நிற்கும் நிபுணர் குழு ஆராய்தல் நாட்டுக்கு நலம்.

"கால்நடைகளை வளர்த்து நல்லபயனைப் பெறலாம்"

யாழ். மாவட்டசபைத்தலைவர் கூறுகிறார்

[கரவெட்டி, புலோலி)

"அரச உத்தியோகங்களை நம்பியிராமல் கால் நடைகளை வளர்த்து நல்ல பயனைப்பெற இளைஞர்களும், யுவதிகளும் முன்வரவேண்டும். இதற்கேற்றவகையில் வடமராட்சி கால்நடையில் வளர்ப்போர்சங்கம் நடாத்தும் இக்கண்காட்சி ஒரு சிறந்த வரப்பிரசாதமாகும்."

இவ்வாறு யாழ்.மாவட்ட சபைத் தலைவர் திரு. க. நடராசா நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் கண்காட்சியைத் தொடக்கி வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

திரு. நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது: அபிவிருத்தி பற்றி இன்று அரசு பேசுகிறது. நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீடுகளை அபிவிருத்தி செய்தால் நாடு அபிவிருத்தி அடைய முடியும். தமிழ் மக்கள் தங்கள் வீடுகளில் வீட்டுக்கு ஒரு பசுவளர்க்க வேண்டும். இதன் மூலம் வீட்டுக்கு மேலதிக வருமானம் கிடைக்கும். எமது பொருளாதார வளமும் பெருகமுடியும். உடுப்பிட்டி எம்.பி. திரு. த. இராசலிங்கம் பேசுகையில், "இப்பகுதி மக்களுக்கு இச்சங்கம் நடத்துகின்ற கருத்தரங்குகளின் உச்சக்கட்டமாக இக் கண்காட்சி நடாத்தப்படுகிறது. இதைப் பார்த்து மனதிருப்தித்து அக்கருத்துக்களை தம் வீடுகளுக்குக் கொண்டு சென்று நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றார்.

பருத்தித்துறை எம் பி திரு க. துரைரத்தினம் பேசுகையில் 'கோழி மேய்த்தாலும் கோர்னமேந்தில் மேய்க்க வேண்டும் என்ற நிலையை இத்தகைய சங்கங்களால் தீர்க்க முடியும். வீட்டுக்குப் பத்துக் கோழியாவது வளர்க்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாட்டு இனம் ஒன்றை உருவாக்க கூடிய திட்டம் எம்மிடமுள்ளது. ஆனால் அரசின் உதவி இல்லாமையால் அத்திட்டத்தை செயற்படுத்த முடியாமல் உள்ளது.

இச்சங்கம் கமக்காரர்களுக்கு அதிக லாபத்தைப் பெறக் கூடிய திட்டங்களைக் கருத்தரங்குகள் மூலமும் பயிற்சி வகுப்புகள் நடத்துவதன் மூலமும் தெரியப்படுத்த வேண்டும்.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி திரு த. கதிரைவேற்பிள்ளை நன்றியுரைகூறினார்.

சாரண

உதவி ஆணையாளர்

22ம் திகதி வருகிறார்

[கரவெட்டி]

சாரணர் உதவிப் பிரதம ஆணையாளர் திரு ஜே லயன்ஸ் சில்வா இம்மாதம் 22ம் திகதி வட பிராந்திய சாரண மாவட்டங்களைப் பார்வையிடுவதற்காக வருகை தரவுள்ளார்.

வட பிராந்திய மாவட்ட சாரணர் ஆணையாளர்களுக்கென கிளிநொச்சியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்து கொள்ளவிருக்கும் இவர் வட்டக்கச்சி மாவட்ட சாரண ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

[அ]

திருமுறைமன்றத்தினருக்கு

வாரியார் பாராட்டு

[மானிப்பாய்]

"சைவப் பெருமக்களாகிய நாம் பெரிய புராண முறையில் செல்கின்றவர்கள் நாம் அனைவரும் பெரிய வீட்டுப் பிள்ளைகள். சைவத்திருமுறைகளைப்பேணிப்பாதுகாப்பதுடன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க பண்ணுடன் ஓதினால் இகபர சௌபாக்கியம் அனைத்தும் பெறலாம். சைவமணம் கமழும் தெய்வத்திருமுறைப் பதிகங்களையும் இறைவன் திருவருட் பாடல்களையும் அச்சேற்றி இலவசமாக அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இலங்கையில் மட்டுமல்லாது சைவப் பெருமக்கள் வாழும் எல்லாஇடங்களுக்கும் வழங்குவது பாராட்டக்கூடிய விடயம்"

அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாரியார் சுவாமிகளிடம் ஆசி பெறுகிறார்.

இவ்வாறு சித்திரா பௌர்ணமி தினத்தன்று திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் சிவபூஜையைத் தரிசிக்கச் சென்ற அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரை சுவாமிகள் பாராட்டும்போது கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், இவ்வாறு பல ஞான தானங்களை வழங்கிக் கொண்டு வரும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் ஆலயங்கள் தோறும் சைவ இல்லங்கள் தோறும் திருமுறைகள் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் திருமுறைகளை விளக்கத்துடன் ஒலிப்பதிவு செய்து ஆலயங்களுக்கு வழங்க இருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாது இல

[5ம் பக்கம் பார்க்க]

பண்டைய காலம்

மகிழ்வார் மக்கள்

பண்டைய காலந் தன்னிற் பகலவன் பாரைக் காய்ச்சின்
பயிரினம் விளைய மாட்டா பசிபிணி பஞ்ச மோங்கும்
மண்டல வெப்பந் தீர மழைநனி பெய்யா தாகில்
மாநிலத் துறையும் மக்கள் மன்னிய கோவில் தோறும்
மண்டல அபிஷேகங்கள் மாபெரும் பொங்கல், பூசை,
மாண்புறு குளிர்த்தி செய்வார் வான்முகில் வழாது பெய்யும்
மண்டிய அம்மை, மன்னே கட்டிய அம்மா காய்ச்சல்
மற்றுள நோய்க ளெல்லாம் மாறிடும் மகிழ்வார் மக்கள்!

- கவியரசு முருகசூரியன்

(அம்மை - சின்னமுத்து, பெரியம்மை (பொக்கிளிப்பான்) போன்ற நோய்கள் மன்னே கட்டிய அம்மா என்னும் நோயை ஒரு சில மக்கள் மண்ணுங்கட்டி அம்மா என்றுஞ் சொல்வர்)

"தேர்தலைத் தமிழ்மக்கள் நிராகரிக்க வேண்டும்"

த. ஈ. வி. புலிகள் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

தீயசக்திகளின் தேர்தல்கால திடீர்த் தமிழீழவலையில் சிக்க வேண்டாம் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

4-5-83-ம் திகதி குறிப்பிட்டு வெளியிடப்பட்டுள்ள இத்துண்டுப்பிரசுரத்தில் நாம் நீண்ட நெடுங்காலமாகச் இனவாத அரசினால் மென்மேலும் ஒடுக்குமுறைக்கு ஆளாவதும் அதன் உச்சக்கட்டமாக இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எமது இளைஞர்கள் சிறையில் அடைபட்டுச் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருப்பதுடன் குரூரமாகக் கொலை செய்யப்படுவதும் விரிவுரையாளர்கள் வைத்தியர்கள் போன்ற எமினத்தின் புத்தி ஜீவிகள் மதகுருமார், மாணவர், பெண்கள் ஆகியோர் சிறையிற் துன்பப்படுவதும் அன்றாட நிகழ்ச்சியாகவுள்ள இவ்வேளையில் இனவாத ஆக்கிரமிப்பாளர்களாகிய ஸ்ரீலங்கா அரசினால் எம்மக்கள் மீது உள்ளூராட்சி நிர்வாகத்திற்கான தேர்தல் வலிந்து திணிக்கப்படுகிறது.

இதில் நாம் பங்கு பற்றுவதால் நாமும் ஸ்ரீலங்கா நாட்டிற்குக் கீழுள்ள ஓர் அமைப்பு என்பதையே ஏற்றுக் கொண்டவராவோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொலைசெய்யப்பட்டுள்ள மூன்று ஐ.தே.க. கட்சிப் பிரமுகர்கள் மீது தாமே நடவடிக்கை எடுத்ததாகவும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வழமையான புலிச்சின்னமும் இடம் பெற்றுள்ளது, தமிழீழவிடுதலைப்புலிகள் அரசியல் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் தலைவர் வே. பிரபாகரன் என்றும் அச்சிடப்பட்டுள்ளது.

முல்லை மாவட்ட அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

"சர்வஜன வாக்கெடுப்பு பிரசாரத்துக்காக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்திருந்தபோது, 'இம்மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்' என உறுதியளித்தார் அதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திகுறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டுள்ளன"

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் திரு ஏ ஆர், எம் மன்சூர் கடந்த மாதம் முல்லைத்தீவு கச்சேரியில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தார் ஒருங்கிணைக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திட்டங்கள் குறித்த இக்கலந்துரையாடல் திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி ஏ எஸ் குணசிங்கத்தின் வருகையை முன்னிட்டு அரசாங்க அதிபர் திரு கே கே ஞானச்சந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்டது

திரு மன்சூர் மேலும் தெரிவித்ததாவது: துரிதமாக அபிவிருத்தி செய்யப்படத் தெரிவாகியிருக்கும் மாவட்டங்களில் முல்லைத்தீவும் அடங்குகின்றது கலாநிதி குணசிங்கம் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றியிருப்பது, இம்மாவட்டத்தை துரிதமாக அபிவிருத்தி செய்து இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதில் அரசாங்கத்துக்கு உள்ள அக்கறையைக்காட்டுகின்றது மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரையிலான மின்சார விஸ்தரிப்பு அபிவிருத்தித்திட்டங்களில் அடங்கும் முதலாவது பெரும் திட்டமாகும் என்றார்

கலாநிதி குணசிங்கம் பேசுகையில் கூறியதாவது!

முல்லைத்தீவு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியுதவி எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் 350 கோடி ரூபாய்கள் இத்திட்டங்களுக்கென செலவிடப்படும். இத்திட்டங்களால் இம் மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளே பெருமளவு நன்மை அடையும் என்றார்.

முல்லைத்தீவுத் தொகுதி எம். பி. திரு, எக்ஸ் எம். செல்லத்தம்பு பேசுகையில் ஆறுகளிலிருந்து மேலதிகமாக இரணைமடுக்குளத்தினுள் நீர் பாய்கிறதென்றும், இதனால் ஒவ்வொரு மழைப் பருவத்தின் போதும் வெள்ளஆபத்து ஏற்படும் நிலை தோன்றுவதாகவும் எனவே அங்கு பாயும் மேலதிக நீரை அணைகட்டி முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்றும் கூறினார். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளைத் தரமுயர்த்துவது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளருமான திரு. கே. ஞானச்சந்திரன் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றியுரை கூறினார். (கி)

யாழ். மாவட்டத்தில் மற்றொரு மாதிரிக்கிராமம்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் மேலும் ஒரு மாதிரிக்கிராமம் அடுத்த மாதம் திறந்துவைக்கப்பட உள்ளது.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இம் மாதிரிக் கிராமத்திற்கு வசந்த கிராமம் என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.

எதிர்வரும் ஜூன் மாதம் 2-ம் திகதி இவ் வசந்த கிராமம் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை பிரதியமைச்சர் திரு. பி. ஸி. இம்புலானவினால் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இப்புதிய மாதிரிக் கிராமம் வீடமைப்புத் திட்டங்களையும் வாசகசாலை, சுகாதார, நீர் விநியோகம், கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள், பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்தி, பயிற்சி நிலையம் போன்றவற்றைக் கொண்டு இருக்கும்.

யாழ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. எம் பஞ்சலிங்கம் இதற்கான ஒழுங்குகளைத் துரிதமாகமேற்கொண்டு வருகின்றார்.

ரூப வாஹினியில் இன்று

மாலை

6-01	சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30	இளைஞர் நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சி (சிங்களம்)
7-00	செய்திமஞ்சரி (தமிழ்)
7-15	'கிறீன்ஹொனட்' — புருஸ்லி நடித்த துப்பறியும் தொடர்
7-45	தகவல் நிகழ்ச்சி
8-15	செய்திமஞ்சரி (சிங்களம்)
9-00	சிங்களத் திரைப்படம்
9-30	செய்திமஞ்சரி (ஆங்கிலம்)
9-45	திரைப்படத் தொடர்ச்சி
11-30	நிகழ்ச்சிகள் முடிவு

திருமுறை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வசமாகத் திருமுறைப்பண்ணிசை சைவசமய பாடம் கர்நாடக இசை ஆகிய வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றனர். அகில இலங்கை முழுவதிலும் திருமுறைப் பண்ணிசை வகுப்புக்களை நடாத்துவதற்கு தமிழகத்தில் இருந்து திருமுறைக்கலைஞர்களை அழைத்து அதிவிரைவில் திருமுறை வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளனர். மன்றத்தலைவர் திரு. க.சொக்கலிங்கம், அமைப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை வாரியார் பாராட்டினார்.

நூல் மதிப்புரை

நூல்: கணபதியே காப்பு
ஆசிரியர்: வைத்தியகலாநிதி
க. இராமசுவாமி
டீ ஐ எம் எல்
'துவாரகை'
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்,
விலை ரூபா 10-00

"மானிடப்பிறவிக்கு மட்டும் ஆன்மீகப்பேறு அமைந்ததாகும்" என்ற கருத்தைப் பின்பற்றுவதற்கு வேண்டிய சிறந்த உபாயத்தை இந்நூல் எடுத்துவிளக்குகின்றது வாழ்வின் அதி முக்கிய நிகழ்ச்சியான சுவாசத்தின் சிறப்பையும் அதன் இயல்புகளையும் கூறும் இந்நூல் சுவாசத்தை சரியான மேலான முறையில் அப்பியாசிப்பதான பிராணாயாமத்தைப்பற்றியும், இப் பிராணாயாமத்திற்கும் கணபதிக்கும் உள்ள தொடர்புபற்றியும் பலதரப்பட்ட விளக்கங்கள் காணப்படுகின்றன.

இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ள பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள் எங்கள் சமயம்பற்றி இதுவரை முழுவிளக்கம் பெறாத பல அம்சங்களுக்கும் பாரம்பரியத்திலிருந்து விலகாதவாறு இவர்கள் தரும் கருத்துக்கள் புதுமையானவை காரணங்களைக் கொண்டமைவதால் சிந்திக்க வைப்பன" என்று குறிப்பிட்டுள்ளமை இந்நூலுக்கு மிகவும் பொருத்தமான கருத்தாகும்.

தமிழ் மறையாகிய திருக்குறள் கடவுள் வாழ்த்தில் விநாயக வணக்கமும் கூறப்பட்டுள்ளது என்று விளக்கியிருப்பதும் விநாயகருக்கு மோதகம் பிரதான நைவேத்தியமானது, அறுகு அர்ச்சிக்கும் பொருளானது; எலி வாகனமமைந்தது என்பன பற்றிய விளக்கங்களும், குட்டிக்குப்பிடுதல், தோப்புக்கரணம்போடுதல் என்பனவற்றிற்கும் உள்ள விளக்கங்களும் ஒவ்வொருவரும் கட்டாயமாக அறிய வேண்டிய உண்மைகளாக உள்ளன

இந்நூலை எழுத எடுத்துக் கொண்ட ஆற்றலையும் வெளியிட்ட முயற்சியையும் பாராட்டுவது தக்கதேயாகும்.

பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்

சனசமூக நிலையங்களுக்கும் குறைந்த மின் கட்டணம்!

(புலோலி)

சனசமூக நிலையங்களுக்கும் ஆலயங்களில் அறவிடுவது போன்று குறைந்த மின்கட்டணம் அறவிடும் சலுகை வழங்கப்பட உள்ளது.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே சனசமூக நிலையங்களுக்கான மின்கட்டணக் குறைப்பு மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றை யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் திரு. இ. இ. வரதராசா பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கும் அனுப்பி வைத்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரி எம் பி. திரு. வி. என் நவரத்தினம் ஒன்றியப்பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்து உள்ள கடிதம் ஒன்றில் உள்ளூராட்சி அமைச்சின் குழுநிலை விவாதத்தில் சனசமூக நிலையங்களுக்கான மின் கட்டணம் அறவிடுவது தொடர்பான விடயம் எடுக்கப்பட்டும் கட்டணம் விகிதத்தைக்குறைப்பதற்குப் பிரதமர் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்து உள்ளார்.

முத்து ஐயன் இடதுகரை பயிர்செய்யாத நிலங்கள் பறிமுதலாகும்

(கரவெட்டி)

முத்துஐயன்கட்டு இடதுகரை படித்த வாலிபர்திட்டத்துக்கென வழங்கப்பட்டகாணிகளில் ஒழுங்காகப்பராமரிக்கப்படாதவை, பயிர் செய்யப்படாதவை பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப திட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டவர்கள் காணிகள் பயிர்செய்யப்படாமலும் பராமரிக்கப்படாமலும் இருந்ததற்கான விளக்கமளிக்க இம்மாதம் 10ம் திகதி காலை இடதுகரை அ. த. க. பாடசாலையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் நடத்தப்படவுள்ள ஆலோசனைக் கூட்டத்தில் சமூகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி முல்லைத்தீவு மாவட்டக் காணியதிகாரி அறிவித்துள்ள அறிவித்தலில் இக் கூட்டத்தில் சமூகமளிக்கத் தவறுமிடத்து அவர்களுக்கு காணியில் அக்கறை இல்லை எனக் கருதப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [வ]

பயிர்களுக்கு கிருமிநாசினி தெளித்தவர் மரணம்

(புலோலி)

"விவசாயிகள் பயிர்களுக்கு கிருமிநாசினி தெளிக்கும் போது கவலையீனமாக இருப்பதனால் பல வேண்டத்தகாத நடவடிக்கைகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே விவசாயிகள் கிருமிநாசினி தெளிக்கும்போது மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும். தொடர்ந்து ஒருமணித்தியாலத்திற்கு மேல் கிருமிநாசினி தெளிப்பதில் ஈடுபடக்கூடாது

இவ்வாறு அல்வாயில் கிருமிநாசினி தெளித்த இளைஞரின் மரணவிசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். வயிரமுத்து எச்சரித்தார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஆனந்தராசா (வயது 26) என்பவரின் மரண விசாரணையை அவர் மேற்கொண்டார். பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். இராஜரட்ணம் சாட்சியை ஆஜர் செய்தார்.

இறந்தவருடன் தோட்டத்தில் வேலை செய்த சுப்பிரமணியம் யோகராசா என்பவர் சாட்சியமளிக்கையில், சம்பவ தினம் காலை 7மணி தொடக்கம் பி. ப 2 மணிவரை இறந்தவர் பயிர்களுக்கு 25டிறம் கிருமிநாசினியைத் தெளித்தார் பின்னர் வீட்டிற்குச் சென்று குளித்துவிட்டு சாப்பிட்டார் சாப்பிட்டபின்னர்வாந்திஎடுத்தார். பின்னர் இறந்தாரென்றார் மந்திகை அரசினர் வைத்தியசாலை டாக்டர் எஸ் யோகநாதன் இறந்தவரின் தந்தை ஆறுமுகம் சுப்பிரமணியம் உட்பட இன்னும் பலர் சாட்சியமளித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி விவசாயிகள் பயிர்களுக்கு கிருமிநாசினி தெளிக்கும் போது கவலையீனமாக இருப்பதனால் இது போன்ற மரணங்கள் சம்பவிக்கின்றன. எனவே விவசாயிகள் கிருமிநாசினி தெளிக்கும்போது மிக அவதானமாக இருக்க வேண்டும். தொடர்ந்து ஒரு மணித்தியாலத்திற்குமேல் கிருமிநாசினி தெளிக்கக்கூடாது என்று எச்சரித்து விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

குருபூசை

(மானிப்பாய்)

வண்ணை - சாத்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் வரும் சனிக்கிழமை மாலை திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை நடைபெறும். திருமுறை பஜனை, விசேட பூஜை என்பவற்றுடன் டாக்டர் நா. கனகரத்தினம் "நாவுக்கரசரும் நமசிவாயப்பதிகமும்" என்னும் பொருள் பற்றி நிகழ்த்தும் உரையும் இக்குருபூஜை விழாவில் இடம்பெறும். (ப)

கைதாகி விடுதலை

(கரவெட்டி)

மேதினக் கூட்டம் பற்றிய துண்டுப்பிரசுரம் வைத்திருந்தபோது கைதுசெய்யப்பட்ட இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

இமையாணனைச் சேர்ந்த சிவசம்பு செல்வநாதன் என்ற மாணவரே ஈழமக்கள்விடுதலை முன்னணியின் பிரஸ்தாப துண்டுப்பிரசுரத்தை வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டவராவார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் அதிரடிப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சுமித் சில்வாவினால் கடந்த 30ம் திகதி மாலை கைது செய்யப்பட்ட இவர் மேதினத்தன்று மாலை விடுவிக்கப்பட்டார்.

மேலிடத்து உத்தரவின் பேரிலேயே பிரஸ்தாப மாணவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. [வ]

“சிறுபான்மையினரைப் புறக்கணிக்காது

ஒற்றுமையுடன் லட்சியப் பயணத்தைத்தொடருவோம்!’

சித்தங்கேணியில் வட்டு. எம். பி. நீலன்

(பண்டத்தரிப்பு)

"எமது இனத்தின் உரிமைக் குரல் உலக அரங்கில் ஒலிக்கும் இவ்வேளையில் எமது மத்தியில் வாழும் சிறுபான்மை மக்களை நாம் புறக்கணிக்காது சமத்துவமாக நடாத்த வேண்டும். அவர்களையும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்று ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும் எமது இலட்சியப் பயணத்தை தொடரவேண்டும்.

இவ்வாறு சித்தங்கேணி கலைவாணி சனசமூக நிலையத்தின் 14 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் குறிப்பிட்டார். நிலையத் தலைவர் திரு. இ. இராசேந்திரம் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற இவ்விழாவில் கலாநிதி நீலன் திருச்செல்வம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

‘சமூக வளர்ச்சியிலும் சமூக ஒற்றுமைக்கும் இந்த நிலையத்தின் ஸ்தாபகரும், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உறுப்பினருமான திரு நடேசு ஆற்றிவரும் பணிகளுக்காக அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பல துறைகளிலும் தமது சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டும் என்ற இலட்சியத்தோடு உழைத்து வரும் அவரை பாராட்டுகின்றேன். இப்பகுதியிலிருந்து கடந்த 25 வருடகாலமாக எவ்வித முறைப்பாடும் பொலிஸ் நிலையத்திற்கு சென்றது கிடையாது என்ற விபரத்தை திரு. நடேசு இங்கு பேசும் போது கூறினார். கிராம மக்களிடையே ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை அவ்வப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் சமாதான முறையில் முன்னின்று தீர்த்துவைக்க முடியும். இந்த வகையில் இந்நிலையம் கடந்த பல ஆண்டுகளாக இப்பகுதி மக்களின் சமூக கல்வி கலாச்சார விளையாட்டுத்துறைகளில் முக்கிய பங்கு வகித்து வருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந் நிலையத்தின் அபிவிருத்திக்கு என்னாலான உதவிகளை திரு. நடேசுவின் உதவியோடு செய்வேன் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்’

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. க. நடேசுவும் உரையாற்றினார். ஆசிரியர் ஆ. த. ஜெயராசா பண்டிதர் ப, இராசகுரு ஆகியோர் உட்படபலர் இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை கலாநிதி நீலன் திருச்செல்வம் வழங்கினார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கிராமோதயசபைத் தலைவர்கள்

[சரவணை]

சரவணைக் கிராமோதய சபையின் புதிய தலைவராக, பண்டிதர் திரு.க. இராசையா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு மத்திய கிராமோதய சபையின் தலைவராக ஆசிரியர் திரு.சி.வி.கே.ஏரம்பு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பாடசாலை அதிபர் திரு. நா. கார்த்திகேசு, ஆசிரியர் திரு. கா. கனகசபை ஆகியோர் புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு மேற்கு கிராமோதய சபைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

[அ]

“இளைஞர்கள் கட்டுப்பாடாக இயங்கவேண்டும்”

கட்டுவனில் அமிர்தலிங்கம்

(மானிப்பாய்)

“அந்தந்தப்பகுதிகளில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை கிராமோதயசபைகள் மூலம் நிறைவேற்ற முடியும். கிராமோதயசபை, பிரதேச சபை, மாவட்ட அபிவிருத்திச் சபை போன்றவற்றால் என்ன பயன் என்று சிலர் கேட்கிறார்கள். இம்மாவட்டசபை, பிரதேசசபை, கிராமோதயசபைகள் பயனற்றவை எனத் தவறாக நினைக்கக்கூடாது. கடந்த காலத்தில் நாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் மூலமாக அடுத்தமாதமளவில் மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கு நிதி வழங்கப்படவிருக்கிறது. இதன் மூலம் மாவட்ட அபிவிருத்தி சபைகள் இயங்கக்கூடியதாக இருக்கும்.”

இவ்வாறு கட்டுவன் கிராமோதய சபைத்தலைவர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி மீண்டும் தெரிவு செய்யப்பட்டமையையும், அவரது சேவையையும் பாராட்டுமுகமாகவும் நடைபெற்ற விருந்துபசாரத்திலே கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

கட்டுவன் மந்திகைசுளநாதப் புலவர் சங்கத்தின் ஆதரவுடன் பொதுமக்கள் நடத்திய இவ்வைபவம் ஊரங்குணையில் திரு. வ. கவிபுரம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. திரு. த. சண்முகநாதன் இவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது!

ஜனநாயக உரிமைகளைப் பேணும் விதத்தில் இத்தகைய அமைப்புக்கள் தமிழ்த்தேசிய இயக்கத்தை வழிநடத்தக்கூடிய எமது இயக்கருத்துக்குச் சார்பானவர்கள் கைப்பற்ற வேண்டும். திரு. கிருஷ்ணமூர்த்தி ஒரு துடிப்பு மிக்க இளைஞர். துடிப்புமிக்க இளைஞர்கள் பொறுப்புகளைச் சுமதினால் அடங்கிநடப்பார்கள். இளைஞர்கள் பொறுப்புக்களை ஏற்கின்ற அதேவேளையில் கட்டுப்பாடாகவும் இருக்கவேண்டும். இளைஞர்கள் அந்தப் பொறுப்புக்களைச் சரியான முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும்.

திரு. கிருஷ்ணமூர்த்தியின் ஈடுபாட்டையும், சேவைகளையும் திரு. அமிர்தலிங்கம் பாராட்டிப் பேசினார். யாழ்.மாவட்ட சபை உறுப்பினர் திரு. இராஜேந்திரம், திரு. சி. சின்னத்தம்பி, திரு. சு. தனபாலசிங்கம், திருமதி சு. அழகம்மா, திரு. ச. கந்தசாமி, திரு. க. கந்தவனம், திரு. இ. உதயகுமார், திரு. க. நரேந்திரன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர் திரு. சச்சிதானந்தம் நன்றியுரை கூறினார்.

அரியாலை சுதேசிய திருநாள் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை 64 - வது சுதேசியத் திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு அரியாலை சனசமூக நிலையத்தினால் வடமாகாண ரீதியிலான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் பட்டன.

மூன்று தினங்கள் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டி முடிவுகள் சில வருமாறு:

60 மைல் சைக்கிள் ஓட்டம், பொ. வரதராஜா, ஐ.செல்லராஜா, ஐ நிகிலத்தேசிகன், வா. செல்லக்கண்டு, கருணாநிதி.

கிரிக்கெட்; ஈச்சமோட்டை கதிரொளி விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எறிபந்தாட்டம் பெண்கள் அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டம் உடுப்பிட்டி இளையவன் விளையாட்டுக் கழகம்.

தாச்சிப் போட்டி பெண்கள் அரியாலை பிள்ளையார் பிஜன் விளையாட்டுக்கழகம் தாச்சிப் போட்டி அரியாலை வக்ஸ்ரீ விளையாட்டுக்கழகம் கிளைப்பந்தாட்டம் அரியாலை சனசமூக நிலையம் 5 மைல் மரதனோட்டம் எஸ். ஜீவரத்தினம், கே. ஜெயபாலன் ப. இந்திர ஸ்ரீ. சிவரத்தினம் 5 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டம் செல்வி ஜெரல்டீன் ஸ்ரீசண்முகம், செல்வி க. சூரியகுமாரி, செல்வி ந. பாலஜெயா, செல்வி எஸ். சுகந்தலோசனா.

5 மைல் முதியோர் சைக்கிளோட்டம்: த.சின்னத்துரை பொ. முத்துக்குமாரு, எஸ். தருமலிங்கம நீளம் பாய்தல் பெண்கள் கீழ்ப்பிரிவு தே: துஷாஜினி த. சுபாஸ்கி கு. ரஜிதா மத்திய பிரிவு த. வனதி து வைஜா, த. ராதை மேற்பிரிவு: எஸ் சோபனா பீ. அனுஷியா நீளம் பாய்தல் ஆண்கள் கீழ்ப்பிரிவு தே. நிருபன் எஸ் நந்தகுமார், ரமணன் மத்திய பிரிவு! க ரமேஷ் எஸ். ஜெயந்தன், பீ தவபரன் மேற்பிரிவு ம. மணி. எஸ். அகிலன் த. சத்தியன்.

கெந்தி அடிவைத்துப்பாய்தல் ஆண்கள்: கீழ்ப் பிரிவு த.பிரபா தி. தயேந்திரன் மு. திலகேஸ்வரன், மத்திபிரிவு எஸ்.சிவானந்தன் எஸ் ஜெயந்தன் மேற்பிரிவு தே. குணரத்தினம் ம. மணி, கு. புரந்திரன் 100 மீட்டர் ஓட்டம் ஆண்கள் கீழ்ப்பிரிவு பீ. திருக்குமார், இ. ரவீந்திரன் ந.சிவபாலா மத்திய பிரிவு எஸ். ஜெயந்தன் என். நகுலராஜ், மேற்பிரிவு! எஸ். அகிலன் எஸ் அருள்தாஸ் அ. ராஜா பெண்கள் கீழ்ப்பிரிவு ஜே. ஜலீனா சி உமாவதி செ. பிரேமா மத்தியபிரிவு த. வானதி, த. சயிலஜா ம, ஜான்சி மேற்பிரிவு அ. ராதை அ, மாலா இ. ஜாமினி,

குண்டு எறிதல்: டீ, ஈ,குணரத்தினம் எஸ், குகதாஸ் ம, அருள்குமார் ஒருமைல் ஓட்டம் பீ, பாலக்குமார். எஸ், தர்மபாலன் கே, ஜெயபாலன் 400 மீட்டர் அஞ்சல் ஓட்டம் பெண்கள் [கப்பிப்பிள்ளைப் ஆண்கள்] அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம்,

முதியோர் ஓட்டம் என். துரைரத்தினம், வீ, புவனேந்திரன் சரவணபவன் சங்கீதக் கதிரை எம்,ஜனகி, எம், மாலா, ரி,கௌசல்யா [மத்தியஸ்தர் ஓட்டம்] முத்துச்சாமி குழு உருத்திரா குழு.

இளம் பெண்களுக்கும் திருமணமான பெண்களுக்கும் இடையில் நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியில் திருமதிகள் வெற்றியீட்டினர், வாலிபர்களுக்கும் திருமணமானவர்களுக்கும் இடையேயான கயிறு இழுத்தல் மோதலில் வாலிபர்கள் வெற்றி பெற்றனர்,

நாடகப் போட்டியில் களவெட்டி நாடக மன்றத்தினரின் பாப்பிகளை என்ன விலை என்ற நாடகம் முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது. சுகிதா சிநேகா கலை மன்றத்தினரின் ‘குயில்’ நாடகம் இரண்டாவது பரிசையும் உதய சபா நாடக மன்றத்தினரின் ‘திருந்திய தீர்ப்பு’ நாடகம் மூன்றாவது பரிசையும் பெற்றுக் கொண்டன.

[புலோ, நி]

“பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்து சிங்கள, தமிழ் மக்கள் போராடுகின்றனர்”

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலை கூட்டணி ஒரு முதலாளித்துவக் கட்சி. அது தமிழ் முதலாளிகளின் நல்வாழ்வுக்காகவே செயல்படும். அது சிங்கள முதலாளித்துவ அரசுடன் இன்று பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அதனால் தமிழ் மக்களின் விடுதலைக்கு தலைமை தாங்க முடியாது.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஓலிஸ்ட்) மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் வடபிரதேச செயலாளர் ஜனூப் எம். ஏ. கி. இக்பால் கூறினார்.

யாழ். முற்றவெளி மைதானத்தில் திரு. எஸ் திவாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனூப் இக்பால் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!-

“ஒன்பது தடவை மக்கள் பாராளுமன்றத்துக்கு மாறி மாறி யு. என். பி. யையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், தமிழ் காங்கிரசையும், தமிழரசையும், இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அனுப்பிவைத்துக் கண்டபலன் என்ன? லட்சோப லட்சம் தொழிலாளர்களும், விவசாயிகளும் மேலும் மேலும் ஏழைகளாக்கப்பட்டுள்ளனர். ஒரு சில பணக்காரர்களும் முதலாளிகளும்மேலும்மேலும் பணக்காரர்களாக்கப்பட்டுள்ளனர். இம் முதலாளித்துவ அமைப்பில் எதுவித மாற்றமுமில்லை. சுரண்டல் அமைப்பு தொடர்ந்தும் சட்டரீதியாகவேயுள்ளது.

“எனவேதான் நாட்டில் வகுப்புக்கலவரங்களும் கொலையும், கொள்ளையும் மலிந்து காணப்படுகிறது. இவ்வமைப்பை உடைத்தெறிய நடத்தப்படும் போராட்டங்களை நசுக்க அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துகிறது. இதற்கெதிராக சிங்கள தமிழ்மக்கள் போராடுகிறார்கள் என்பது புரட்சிகர எண்ணமுள்ளவர்களுக்கு ஒரு சந்தோஷமான விடயமாகும்.

“அதேநேரம் யு. என். பி. அரசின் பாஸிஸ நடவடிக்கைக்கெதிரான போராட்டம் வடபகுதியில் கெரில்லாப் போராட்டமாக மாறிவிட்டது என்றார்.

சுண்டிக்குளம்...

[8-ம் பக்கத்தொடர்ச்சி]

ரான திரு.இ. கிருஷ்ணராசா இருபகுதி மீனவரையும் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து தட்டுவங்கொட்டி மீனவரும் புளியம்பொக்கணை மீனவரும் அடங்கிய ஆறுபேர் கொண்ட வழிநடத்தல் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

மீனவரிடையே தொடர்ந்தும் கலவரங்கள் ஏற்படாமல் நடவடிக்கை மேற்கொண்ட கிளிநொச்சி கிராமசேவை அலுவலர் திரு. தனபாலசிங்கத்திற்கு கிளிநொச்சி எம். பி. பாராட்டுத் தெரிவித்தார். (அ)

காங்கேசன்துறையிலிருந்து

பங்களாதேஷுக்கு உப்பு ஏற்றுமதி!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பங்களாதேஷிற்கு உப்பு ஏற்றுமதி செய்யும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

காங்கேசன்துறை புதியதுறைமுகத்தை வந்தடைந்துள்ள ‘கெல்சி’ என்னும் சீனக் கப்பலில் 10 ஆயிரம் தொன் உப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பங்களாதேஷிற்கு இந்த உப்பை காங்கேசன்துறை ஜெயபாலசிங்கம் அண் கம்பனியினர் ஏற்றுமதி செய்கிறார்கள்.

அத்துடன் காங்கேசன்துறை பழைய துறைமுகப் பகுதியில் வந்து தங்கிநிற்கும் ‘ஒலிம்பிக் 88’ என்னும் கொரியா நாட்டுக் கப்பலில் 7 ஆயிரம் தொன் உப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுவும்பங்களாதேஷிற்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஏற்றுமதியை காங்கேசன்துறை நியூகோ ஸ்தாபனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இக் கப்பல்களில் ஏற்றுமதி வேலைகள் முடிவடைந்ததும் மேலும்கப்பல்கள் அடுத்தடுத்து காங்கேசன்துறைக்கு வரவிருப்பதாகவும் அவற்றில் உப்பு ஏற்றுமதி இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உப்பு ஏற்றுமதி மூலம் ஏராளமான தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரியாகக் கடமையாற்றிய திருமதி வேதா. சிவதாசன் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு நீதிமன்றங்களில் குடும்ப ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார், யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலையின் பழைய மாணவியான இவர், பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியாவார்.

[மா]

கிரிக்கெட் உலகக் கிண்ண பந்தய இலங்கை அணி!

[கொழும்பு]

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கிரிக்கெட் உலகக் கிண்ண பந்தயங்களில் கலந்து கொள்ளவிருக்கும் இலங்கை அணியினரின் பெயர்கள் வெளியாகியுள்ளன. 14 ஆட்டக்காரர்கள் இலங்கை அணியில் இடம் பெறுகின்றனர்.

அணித் தலைவர்: டுலீப் மெண்டிஸ், உப அணித் தலைவர்: ரோய்டயஸ், சிதாத் வெத்திமுனி, சுசில் பெர்ணாண்டோ, ரஞ்சன் மடுகல்ல, அர்ஜுன ரணதுங்க, சோமச்சந்திர டிசில்வா, அசந்த டிமெல், கை டி அல்விஸ், ரூமேஷ் ரத்நாயக்கா, விநோதன் ஜோன், பிறெண்டன் குறுப்பு, அத்துல சமரசேகர, இரான்வில் டிசில்வா.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட இலங்கை அணியிலிருந்த அமல்சில்வா, ஸ்ரீதரன் ஜெகநாதன், ஜொஹன் குணசேகரா ஆகியோர் இந்த அணியில் இடம்பெறவில்லை. இவர்கள் அப்பயணத்தின் போது பெருமளவு சோபிக்காததே இம்முறை அணியில் இடம் பெறாமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [இ]

இராணுவக் கோஷ்டி வெற்றி பெற்றது

[திருகோணமலை]

சிவசுப்பிரமணிய வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்ற இராணுவக் கோஷ்டிக்குத் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு இரா சம்பந்தன் வெற்றி விருதை வழங்கினார்.

திருகோணமலை உதைபந்தாட்டச் சங்கம் நடாத்திய இச் சுற்றுப் போட்டியில் மன்னார், திருகோணமலை, வவுனியா, குருநாகல் மாவட்ட உதைபந்தாட்டக் குழுக்களும் இராணுவ கடற்படை, விமானப்படைக் குழுக்களும் பங்கு பற்றின. இறுதி நாளன்று நடைபெற்ற போட்டியில் இராணுவக் கோஷ்டி குருநாகல் மாவட்டக் குழுவை 5-1 கோல்களால் வென்று முதலிடத்தைப் பெற்றது

(க)

வல்வை ஐ. தே. க. ஆதரவாளர் மரணவிசாரணை:

'கொலை எனத்தீர்ப்பு

[புலோலி]

வல்வெட்டித்துறை ஐ. தே. கட்சி ஆதரவாளர் திரு. எஸ். எஸ். இராசரத்தினத்தின் மரணம் கொலை எனத்தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை இக் கொலை தொடர்பாகத் தொடர்ந்தும் விசாரணை செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த 29ம் திகதி பிற்பகல் பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறையை நோக்கி மினிவானில் சென்று கொண்டிருந்த ஐ தே. கட்சி ஆதரவாளர் திரு. இராசரத்தினம் வல்வெட்டித்துறைச் சந்தியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் வெளியே இழுக்கப்பட்டு சுடப்பட்டு ஸ்தலத்திலேயே மரணமானார்

இம்மரணம் சம்பந்தமான விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட யாழ். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியத்தின் அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அறிக்கையில் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட காயங்களினால் மரணம் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனையடுத்து நீதவான் இராசரத்தினத்தின் மரணம் கொலை எனத்தீர்ப்பளித்து பொலிசாரைத் தொடர்ந்தும் விசாரணை செய்ய உத்தரவிட்டார்.

மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட்போட்டி இம்மாதம் 26,27,28,29 ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பங்குபெற விரும்பும் கழகங்கள் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகச் செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இப்போட்டி வடமாகாண ரீதியில் முதன்முறையாக நடாத்தப்பட விருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுப் போட்டி

(மானிப்பாய்)

சுதுமலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 27-வது ஆண்டுவிழாவையொட்டி இளைஞர்களுக்கிடையிலான ஓர் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 14-ம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறும். நிலையத்தலைவர் திரு. சி. சங்கர் தலைமையில் நடைபெறும், இப்போட்டியில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கலந்து கொள்கிறார், இதற்கான ஏற்பாடுகளை கழக செயலாளர் தமிழ்ச்செல்வன் மேற்கொண்டுள்ளார், (ப))

மல்லாகம் கி. அ. சங்கம் சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடாத்திய 9பேர், 11பேர் கொண்ட இரு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இரண்டிலும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தினர் முதலிடத்தைப் பெற்று வெற்றிக்கேடயத்தைசுவீகரித்தனர். அத்துடன் 13 கழகங்கள் பங்கு பற்றிய போட்டிகளில் திறம் விளையாட்டு வீரராக மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க விளையாட்டு வீரர் தர்மகுலநாதன் வெற்றிக்கிண்ணத்தைப் பரிசாகப் பெற்றார்.

9 பேர் கொண்ட இறுதிப் போட்டி புத்தூர் மைதானத்தில் நடைபெறவிருந்தும் எதிர் கோஷ்டியான யாழ். முஸ்லீம் கழகத்தினர் சமூகமளிக்காத வறியமையால் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தினரே வெற்றிபெற்றவர்களாக கொள்ளப்பட்டனர்.

11 பேர் கொண்ட இறுதிப் போட்டி புத்தூர் மைதானத்தில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகத்தினரும் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழகத்தினருமிடையே நடைபெற்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களால் வெற்றியீட்டியது. மல்லாகம் சார்பில் இளைய வடிவேல் 2 கோல்களையும் நந்தகுமார் ஒரு கோலையும் அடித்து வெற்றியீட்டினார். விளையாட்டைப் பார்வையிட பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் சமூகமளித்தனர்.

(வி)

"சேட்டில்பிடித்து இழுத்து கீழே விழுத்திச் சுட்டனர்"

மரண விசாரணையில் சாட்சியம்

(புலோலி)

"வல்வெட்டித்துறைச் சந்தியில் வானை நிறுத்தியபோது இரு துப்பாக்கிகளுடன் தோன்றிய இருவர் வான் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரயாணியை "நீதானடா யு. என். பி. ஓகனைசர்?" என்று சொல்லி சேட்டில் பிடித்து இழுத்து கீழே விழுத்திச் சுட்டார்கள். அவ்விருவரும் சாரமும் சேர்ட்டும் அணிந்திருந்தனர்.

இவ்வாறு வல்வெட்டித்துறை ஐ.தே.கட்சிப் பிரமுகர் எஸ். எஸ். இராசரத்தினம் இனந்தெரியாத வாலிபர்களினால் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான சம்பவம் தொடர்பான விசாரணையில் சாட்சியமளித்த மினி வான் சாரதியான உடுப்பிட்டி 15-ம் கட்டையைச் சேர்ந்த சாமி ஐயா செல்லையா குறிப்பிட்டார். மரணமான இராசரத்தினத்தின் மரணம் சம்பந்தமான ஸ்தல விசாரணைகளைப் பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை மேற்கொண்டார்.

வான் சாரதியின் சாட்சியத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 29ம் திகதி மாலை 5மணியளவில் பருத்தித்துறையிலிருந்து எனது மினி வானை வல்வெட்டித்துறையைநோக்கி ஓட்டிச் சென்றேன். வானின் முன் ஆசனத்தில் இறந்த இராசரத்தினம்மட்டும் இருந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

வல்வெட்டித்துறைச் சந்தியில் வானை நிறுத்தியதும் பிரயாணிகள் ஏறி இறங்கினார்கள். அப்போது முன் ஆசனத்தில் இருந்தஇராசரத்தினத்தை சாரமும் சேர்ட்டும் அணிந்த துப்பாக்கி வைத்திருந்த இளைஞர் ஒருவர் நீதானடோடா யு என். பி. ஓகனைசர் என்று கேட்டு அவரைப்பிடித்து இழுத்தார். இன்னொரு இளைஞரின் கையிலும் துப்பாக்கி இருந்தது. அப்போது துவக்கு வெடிச் சத்தமும் கேட்டது. பல வெடிச் சத்தங்கள் கேட்டன.

நான் பயத்தினால் பதட்டமடைந்தேன். அப்போது வானும் இயங்காமல் நின்றுவிட்டது கண்டக்டரின் உதவியுடன் வானைத்தள்ளி ஸ்டார்ட் பண்ணி வல்வெட்டித்துறைப் பொலிசிற்குச் சென்று நடந்தவற்றைச் சொன்னேன்.

சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சர்வோதய சிரமதான சமிதியினரால் சில்லாலை பாலைக்கட்டு ஒழுங்கை சிரமதான மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சமிதியின் தலைவியும், பண்டத்தரிப்பு கிராமோதய சபைத் தலைவியுமான திருமதி பேபி அந்தனுஸியார் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியை சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு எஸ். எச். ஜெபநேசன் அடிகளார் நல்லாசி கூறி ஆரம்பித்து வைத்தார். சமிதி செயலாளர் திரு புவனேஸ்வரன் இதற்கான ஒழுங்குகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலையில் தொடர்ந்து 13 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு எஸ் கே. பேரம்பலம் இம்மாதம் தொடக்கம் தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியை திருமதி ந. செல்லையா இடமாற்றம் பெற்றுள்ளார்.

சங்கானை கிளை கூட்டணி நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை வழக்கு தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளையின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் கூட்டணி வட்டுக்கோட்டைத்தொகுதி அமைப்பாளர் திரு ச.பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது கிளை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா.கனகசபை, உப தலைவர்; த.கோவிந்தசாமி, செயலாளர்: ந இராசதுரை, உப செயலாளர்: ந.இராசலிங்கம், பொருளாளர்: க.சற்குணராஜா 10பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் இலவச ஒருநாள் கிளினிக்

(கிளிநொச்சி)

வடபிரதேச சித்தஆயுர்வேத வைத்திய சங்க ஆதரவிலான இலவச வைத்திய சிகிச்சை முகாம் ஒன்று இம்மாதம் 9-ம் திகதி கிளிநொச்சி 155 கட்டை கிருஷ்ணபுர உள் அரங்க விநாயக ஜெய ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி குணநாயகி கந்தசாமி டாக்டர் கே. வி. கே திருலோகமூர்த்தி ஆகியோர் இலவச சிகிச்சையை வழங்குவார்கள். [அ]

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எல்லாமே
பணத்துக்குத்தாண்டா

மனோகரா தினசரி
(யாழ்.நகர்) 4
காட்சிகள்
RIVALS
(Adults Only—Color)
6-5-83 முதல்
வாழ்வே மாயம்

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-10 7-00
சனி. ஞாயிறு 1-30
பெரியஇடத்துப்
பெண்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
நவாப் நாற்காலி

லிடோ (யாழ்.நகர்)
10-30, 2-15, 4-45,
7-15, 9-30.
THE JUNGLE
GODDESS

சாந்தி தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்) 5 & 6
CLINT EASTWOOD IN
"ANY WHICH WAY
YOU CAN"
Action - Thrill - Color
7—12 "ONE DOWN TWO TO GO"

ரீகல் 3-வது ஹவுஸ் புல் வாரம்
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, பிரபு, சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா,
சுமித்ரா, மனோரமா
சங்கிலி (ஈஸ்ட்மென் கலர்)
இன்னும் 4 தினங்கள் மட்டும்

வின்ஸர் தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
அடுத்த வெளியீடு IDEAL MARRIAGE

ஸ்ரீதர் (யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
CALIFORNIA DOLLS

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
எம். ஜீ. ஆர். - சரோஜாதேவி
திருடாதே
(புதிய பிரதி)

"மலையகமக்களும் தமிழ்த் தேசிய இனத்தின் அங்கமே"

[கிளிநொச்சி]

"தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாண மண் பாதுகாக்கப்படவேண்டும். திட்டமிடப்பட்ட குடியேற்றத் திட்டங்களால் பாரம்பரிய தமிழ் பிரதேசம் நாளுக்கு நாள் பறிபோகிறது. இனவிடுதலைக்குமுன் எமது பகுதிகளைப் பேணிக் காப்பாற்ற வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு பாடுபடுவோம்."

இவ்வாறு கிளிநொச்சியில் சமநீதி இயக்கம் நடத்திய மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பிரஸ்தாப இயக்க அமைப்பாளர் பி. கே. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

ஆசிரியர் வேல். சண்முகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பி. கே பாலசுப்பிரமணியம் மேலும் பேசுகையில் "1947ம் ஆண்டு ஜி ஜி பொன்னம்பலம் முதன்முதலாகப் பிரிதானியரிடம் தமிழ் ஈழம் அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் குரல் எழுப்பினர். தொடர்ந்து தந்தை செல்வா போன்ற தலைவர்கள் தமிழ் ஈழக் குரல் எழுப்பினர். இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழவிடுதலை அணி மற்றும் இளைஞர் இயக்கங்களும் தமிழ் ஈழத்திற்காகப் பாடுபடுகின்றன. சமநீதி இயக்கத்தைப் பொறுத்தவரை ஈழவிடுதலைப் போராளிகளுக்குத் தலைவணங்குகிறது" என்றார்.

"சிறுபான்மை மலையக தேசிய இனம்" என்ற பதத்தை சமநீதி இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது மலையகமக்களும் தமிழ் தேசிய இனத்தின் ஒரு அங்கமேயென்று எமது இயக்கம் வலியுறுத்துகிறது என்றும் இன்று தமிழ் இளைஞர்கள் மேற்கத்திய நாடுகளில் அடிமை வாழ்வு வாழ்கின்றனர் என்றும் இது எல்லாம் அரசியல் அமைப்பிலேற்பட்ட பாரதூரமான தவறுகளேயென்றும் நீதியும் சமத்துவமும் மறுக்கப்பட்ட அனைவருக்கும் சமநீதி இயக்கம் குரல்கொடுக்கத் தயங்காது என்றும் அவர் கூறினார். [அ]

மாணவர்களின் ஏமாற்றங்களைத் தவிர்க்க

I. C. M. A.

Foundation Stage Section A

யாழ்., கொழும்பு பிரபல விரிவுரையாளர்களின்
இணைந்த போதனை

COSTING & ACCOUNTS
Mr. R. Sivakumaran

ECONOMICS
Mr. Perinpanathan
Mrs. Suntharalingam

★ முழுச் கட்டணமும் 225/- மட்டுமே
★ மாணவரின் வசதிக்கேற்ப மாதாந்தக் கட்டண வசதியும் உண்டு.
★ இரு பிரிவுகட்கும் 25 மாணவர்கட்குப் புலமைப் பரிசில்கள்.
★ அடிப்படை கணித, ஆங்கில பரீட்சை நடத்தப்படும்.

பரீட்சை: 16-5-83
(முன்கூட்டியே அனுமதி பெறுபவர்கள் மட்டுமே பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்)

DAY COURSE
ஆரம்பம்:- 9-5-83 காலை 9-00

WEEKEND COURSE
ஆரம்பம்:- 14-5-83 காலை 9-00

உங்கள் சிறந்த எதிர்காலமே
எமது இலட்சியம்.

DARMANANDA INSTITUTES
Stanley Road, Jaffna.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
தொலைபேசி:- 24011

இயக்க பிரசுரங்களுடன் கைதானவரை விடுதலை செய்வதா? இல்லையா?

இம்மாதம் 17ம் திகதி தீர்ப்பு

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து இயக்கப் பிரசுரங்களுடன் வந்தபோது கைதான பரமானந்தன் பரந்தாமனை விடுதலைசெய்வதா? இல்லையா என்பதுபற்றி இம்மாதம் 17ம் திகதி தீர்ப்பளிக்கப்படும்.

இவ்வழக்கு கோட்டை நீதிவான் எம். இமாம் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டபோது அரச சட்டத்தரணி சாந்தலால் குமாரசிறி சந்தேகநபரை தொடர்ந்து காவலில் வைத்திருக்கவேண்டுமென்று கூறினார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாததனால் அவரை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

சந்தேகநபரை விடுதலைசெய்வதா? இல்லையா என்பதுபற்றி இம்மாதம் 17ம் திகதி தீர்ப்பு அளிக்கப்படும். (அ)

மரண அறிவித்தல்

தி. தேவசிகாமணி
தே. அசோக்குமார்
தே. சுகுணா

நடராசஜகோட்டம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. தி.தேவசிகாமணி, அவருடைய புதல்வன் அசோக்குமார், புதல்வி செல்வி சுகுணா ஆகிய மூவரும் அகால மரணமானார்கள். திரு. தி. தேவசிகாமணி முன்னாள் வன இலாகாவில் கடமையாற்றியவரும், தற்சமயம் மொறட்டுவ டபடா தொழிற்சாலை அதிபரும், கொழும்பு எஸ். எஸ். கே. ஜஜா அலாவுடீன் அன் சன்ஸ் ஜவுளி வியாபாரப் பங்காளியும், கட்டுநாயக்க லெமரூஸ் ஜவுளி ஸ்தாபன பங்காளியும் ஆவர். இவர், சுரோஜாதேவியின் அன்புக் கணவரும், ரமேஷ்குமார், சுரேன், அரவிந்குமார், ரேணுகா ஆகியோரது அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. இ. திலகராசா திருமதி காந்திமதி அம்மாவின் புதல்வருமாவர். அன்னார் திருமதி நாகநாயகிஅம்மை சண்முகசுந்தரம், திரு. தி நவரெத்தினராசா, திருமதி கமலா கஜானந்தமூர்த்தி ஆகியோரின் சகோதரரும், திரு. K S சண்முகசுந்தரம் (சட்டத்தரணி), திருமதி மாரி நவரெத்தினராசா, திரு. ச. கஜானந்தமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற S. V. நடராஜா திருமதி மகாலட்சுமி நடராஜா ஆகியோரின் மருமகனும், திருமதி ரூபா சிவத்தம்பி, திருமதி சாரதாதேவி சிறீதரன், திருமதி நிர்மலாதேவி தேவசிகாமணி, ந. விஜயகுமார், ந. சுரேஷ்குமார், திருமதி வத்சலாதேவி மோகனசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், Dr K. சிவத்தம்பி [யாழ் பல்கலைக்கழகம்], A சிறீதரன் [இலங்கை மின்சாரசபை], ச. தேவசிகாமணி [நீர்ப்பாசன இலாகா], வே. மோகனசுந்தரம் [கணக்காளர்] ஆகியோரின் சகலனும், திருமதி இராஜேஸ்வர விஜயகுமார், திருமதி பவானி சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் (Cousin) ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வல்வெட்டித்துறை மயானத்தில் இன்று [5-5-83] பிற்பகல் 4-00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 7117

ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க முடிவு

[கொழும்பு]

1980ம் ஆண்டு ஜூலை மாதம் வேலை நிறுத்தத்தின் போது வேலையிழந்த சகல ஆசிரியர்களும் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இதுவரை வேலை வழங்கப்படாத 640 ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலைவழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

வானொலியில் தமிழில் ஒலிபரப்பப்பட்ட மேதினப் பேச்சுக்களின் தொகுப்பு நிகழ்ச்சி ஒன்றில் இரு அமைச்சர்கள் உரைகள் இருட்டடிப்புச்செய்யப்பட்டது தொடர்பாக நடந்த விசாரணையின் பின், அறிக்கையொன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிபர் கையளித்த இந்த அறிக்கையில் இரு தமிழ் ஊழியர், ஒரு முஸ்லீம் ஊழியரின் வாக்கு மூலங்களும் அடங்கியுள்ளது. (அ)

புதிய வாக்காளர் அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொள்ளையடிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளுக்குப் பதிலாகப் புதிய அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். தேர்தல் அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக அனுமதியினைப் பெறத் தகுதியுடையவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் 15,468பேர்மட்டுமே இதுவரை விண்ணப்பித்துள்ளனர்.

டேவிட்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேபம் தாக்கல் செய்வதற்கு நேற்று அவகாசம் கோரப்பட்டது.

நீதிபதிகள் ஜூன் 6ம் திகதி வரை ஆட்சேபம் தாக்கல் செய்ய அவகாசம் வழங்கினார்கள். (அ)

வடபகுதி....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதேசத்திலுள்ள ஏரிகள், குளங்களுக்கு நன்னீர் கிடைக்க வழியேற்படுவதுடன் ஏரிகளைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் விவசாயத்துக்கு நன்னீர் கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

1985-ஆம் ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும் என்பதையும் மூன்றுஆண்டுகளில் அது நிறைவேற்றப்படவேண்டும் என்பதையும் மந்திரி சபை உபகுழு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் ஆலோசனையின்பேரில் நேற்று மந்திரிசபையின் பொருளாதார உபகுழு இதுசம்பந்தமாக ஆராய்ந்தது. (இ)

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8 - 30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7 - 45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம்பிறுன்ஸ் லிமிட்டெட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22376—22438—22537

(3) யாழ்மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி,
தொலை பேசி இல: 22278. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
இல: 468, காலி வீதி, கொள்ளுப்பிட்டி:
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 885, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmder
Q. B 100236/81 Eelanadu-P O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.